தொகுப்பு இல. 19 இதழ். 1 ஆனி 2024

# கொழும்பு இறையியல் கல்லூரி INFORMATION





# மனிதனாக இருப்பதற்கான வேதாகம உணர்வை உருவாக்குதல்

## மனிதனாக இருப்பது என்பதன் அர்த்தம் என்ன?

**இது, எமது நாட்களில் காணப்படுகிற மிக அழுத்தமான கேள்வியாகும்.**



அதிபரின் சிந்தனையிலிருந்து

ஐவோ பூபாலன், PhD
அதிபர்

"உளவியல் சார்ந்த பிரிவுகளும் உள்ளான அவதானமும் ஒரு மனிதன் நவீனமயமானவனாக இருப்பதற்குரிய அடையாளங்கள்" என்ற சிந்தனையினால் உலகம் தீவிரமாக மறுவடிவமைக்கப்படுகிறது. இது உதாரணமாக, "பாடசாலைகள் மற்றும் திருச்சபைகள் போன்ற நிறுவனங்கள் ஒருவர் செயற்படுவதற்கு செல்லும் இடங்களேயன்றி வடிவமைக்கப்படுவதற்காக அல்ல" என்பன போன்ற வாதங்களை முன்வைக்கக்கூடிய "வெளிப்படையான தனிமனிதவாதம்" என்ற புதுமையான நிகழ்வினை கொண்டு வந்துள்ளது. முன்பதாக, பகிரப்பட்ட சமூகத்திற்குள் தனிமனிதர்கள் பங்கேற்ற சமூகமே கலாச்சாரம் என்பதான புரிதல் இன்று முழுமையாக மாறி விட்டது. இன்று நவீன வழியில் மனினாக வாழ்வது என்பதில் தனிப்பட்ட நம்பிக்கைகளும் விருப்பத்தேர்வுகளும் மையமாக மாறி விட்டன. அத்தோடு சம்பிரதாயங்களும் மற்றும் நிறுவனங்களும் வெறுமனே தனிப்பட்டவர்களின் நம்பிக்கைகளை உறுதிப்படுத்தவும் அவற்றுக்கு இணங்கிப்போகவுமே எதிர்பார்க்கப்படுகின்றன (CARL TRUEMAN, THE RISE AND TRIUMPH OF THE MODERN SELF).

இந்த நகர்வே பாலினம் மற்றும் பாலினப்பண்பு குறித்த எமது மிகப்பெரும் எழுச்சிமிக்க சிந்தனைக்கு இயற்கையாகவே வழிவகுத்த அடையாளம் தொடர்பான கவலைக்கு வேராக உள்ளது. முந்தையதை பொறுத்தவரை, ஆண், பெண் என்று பாலினத்தை பற்றி பேசுவதிலிருந்து எண்ணிலடங்கா பாலினங்களின் சாத்தியக்கூறுகள் குறித்தான சிந்தனைக்கு நாம் நகர்ந்துள்ளோம். ஆனால் பிந்தையதைப்பொருத்தளவில் அவனுக்கு அல்லது அவளுக்கு எவ்விதமான பாலியல் நடத்தையானது சரியானதும் நன்மை பயக்குமானதாகவும் இருக்கும் என்பதை தீர்மானிக்கும் பொறுப்பை தனிநபர்களிடத்தில் விட்டுவிடுகிறது.

மேலும் வாசிப்பதற்கு.

## கொழும்பு இறையியல் கல்லூரி, கிறிஸ்துவிற்கொப்பான தலைவர்களை உருவாக்குதலில் 30 ஆண்டுகால நிறைவினை கொண்டாடுகிறது

கொழும்பு இறையியல் கல்லூரியானது, அனைத்து திருச்சபைகளுக்குமான, கொழும்பின் முக்கிய புறநகர்ப்பகுதியில், மும்மொழி மூலமான, திருச்சபையிலும், சந்தைவெளி எனப்படுகிற மதசார்பற்ற தொழில் ஸ்தாபனங்களிலும், சமூகத்திலும் திறம்பட பணி செய்யக்கூடிய கிறிஸ்துவிற்கொப்பான தலைவர்களை தயார்படுத்துவதில் ஆதாரமாக விளங்குவதற்காக தன்னை அர்ப்பணித்த இறையியல் கல்லூரியாக தனது செயற்பாடுகளை ஆரம்பித்து 2024 வைகாசி 31-ம் நாள் அன்று 30 வருடங்களை பூர்த்தி செய்கின்றது.

# ஒரு கற்றல் சமூகத்தை போஷித்தல்

## இறையியல் கல்வியை உருமாற்றுதல்




### கலாநிதி.பெர்ரி ஷாவுடனான 2 நாள் கல்விப்பீட மேம்பாட்டு கருத்தரங்கு

கலாநிதி. பெர்ரி ஷாவினுடைய “இறையியல் கல்வியை உருமாற்றுதல்” எனும் கருத்தரங்கினால் கொழும்பு இறையியல் கல்லூரியின் கல்வீப்பீட உறுப்பினர்கள் அனைவரும் பெரிதான ஆசீர்வாதத்தினை பெற்றனர். சித்திரை மாதம் 3 மற்றும் 4-ம் திகதிகளில் இடம்பெற்ற மேற்படி கருத்தரங்கில், வளர்ந்தோரது பல்வேறுபட்ட கற்றலின் பல்வேறு அம்சங்களை குறித்து ஆராயப்பட்டது.

## இறையியல் கல்லூரிகளுக்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட புதிய மின்-நூல் தளத்தினை குறித்து ஆராய்தல்



### மின்-இறையியல் நூல் வலையமைப்பு (e-TBN) நூலக வசதி குறித்து கொழும்பு இறையியல் கல்லூரி கல்விப்பீட உறுப்பினர்களுக்கான பயிற்சி.

கொழும்பு இறையியல் கல்லூரியின் நண்பர் ஒருவரின் பெருந்தன்மையான அன்பளிப்பிற்கூடாக, எமது கல்லூரியின் நூலகமானது தற்போது மின்-இறையியல் நூல் வலையமைப்பு (e-TBN) எனப்படுகிற தளத்திலுள்ள நூல் தொகுப்புகளை உபயோகிப்பதற்காக அணுகக்கூடிய வாய்ப்பை பெற்றுள்ளது. கொழும்பு இறையியல் கல்லூரி கல்வீப்பீடத்தினருக்கும், முதுகலைப்பட்ட மாணவர்களுக்கும் இதை குறித்த அறிமுகப்பயிற்சியானது கலாநிதி. வினோத் குணசேகர (முன்னாள் துணை அதிபர்) அவர்களால் வழங்கப்பட்டது. மின்-இறையியல் நூல் வலையமைப்பு (e-TBN) எனப்படுகிற இவ்வசதியானது, கொழும்பு இறையியல் கல்லூரியின் கல்விப்பீட உறுப்பினர்களுக்கும், மாணவர்களுக்கும் கிடைப்பதற்கு அரிதான இறையியல் நூல்கள் மற்றும் வளங்களை அவர்கள் இருக்கிற இடத்திலிருந்தே அணுகுவதற்கு உதவுகிறது.

# கொழும்பு இறையியல் கல்லூரி தலைமையகத்திற்கு இறையியல் அறிவர்களின் வருகை

### நீதிமொழிகள் மற்றும் ஞான இலக்கியத்தினை ஆராய்தல்

பழைய ஏற்பாடு தொடர்பான அறிவர் கலாநிதி.பிரின்ஸ் குமார் தமிழரசன் அவர்களுடனான கருத்தரங்கு



ஞான இலக்கிய புத்தகங்களின் விரிவான ஆய்வானது, தமிழ் மாணவர்களை ஞான இலக்கியத்தின் மீதான ஆழமான புரிதலை மேம்படுத்துகிறதாக அமைந்திருந்தது.

### பன்முக கலாச்சார சூழலில் வளர்ந்தோருக்கான உருமாற்றத்தை ஏற்படுத்தும் கல்வி

இறையியலாளரும் கல்வியாளருமான கலாநிதி.டெபி கிரம்ளிச் உடனான முதுகலை கற்கை



பன்முக கலாச்சார வகுப்பறை சூழலில் வளர்ந்தோர் அனைவருக்குமான, உருமாற்றத்தை ஏற்படுத்தும் கற்றல் அனுபவங்களை எவ்வாறு உருவாக்குவது என்பது தொடர்பாக முதுகலை மாணவருக்கு கற்பிக்கப்பட்டது.

### ஆரம்பகால வரலாறு: ஆதியாகமம் 1-11

பழைய ஏற்பாட்டு அறிவர் கலாநிதி. ஹவிலா தரம்ராஜ் உடனான வரலாற்றுக்கு-முந்தைய வருணணை தொடர்பான கற்கை



மனிதர்களின் படைப்பு, பாவம் மற்றும் அதன் விளைவுகள், இரட்சிப்பின் வரலாறு, மொழி மற்றும் தேசங்கள் என்று ‘அனைத்தினதும் ஆரம்பம்’ தொடர்பாக ஆராயக்கூடிய சந்தர்ப்பம் முதுகலை மாணவர்களுக்கு கிடைத்தது.

### மனித மேம்பாடு மற்றும் ஆலோசனை

போதகர், ஆலோசகர் மற்றும் பயிற்றுவிப்பாளரான கலாநிதி. டேவிட் குட்வின் உடனான மானிட விசுவாசம் மற்றும் மேம்பாடு தொடர்பான பல்துறை கற்கை



வாழ்வின் வெவ்வேறு படிநிலை மாற்றங்களுக்கான வளர்ச்சித்தேவைகள் மற்றும் சிக்கல்கள் தொடர்பான கற்கையில் ஈடுபட மற்றும் பூரணத்துவத்தை நோக்கி செல்ல மக்களுக்கு உதவுதல் தொடர்பாக புரிந்துகொள்வதற்கு ஆலோசனைப்பணியில் முதுகலையை தொடருகிற மாணவருக்கு வாய்ப்புக்கிடைத்தது.

# கொழும்பு இறையியல் கல்லூரி சமூகம்



### பல வருட விசுவாச சேவைக்கான கொண்டாட்டம்

2023-ம் ஆண்டு தனது நிறைவை எட்டியபோது, விசுவாசமான உக்கிராணத்துவத்துடனும், சேவை அர்ப்பணிப்போடும் மிக நீண்ட வருடங்கள் பணியாற்றிய தனது பணிக்குழுவின் மூன்று அங்கத்தவரின் சேவையை கொழும்பு இறையியல் கல்லூரி கொண்டாடியது. கலாநிதி. ஐவோ பூபாலன் அவர்கள் கொழும்பு இறையியல் கல்லூரியின் அதிபராக 25 வருடங்களை பூர்த்தி செய்துள்ளதோடு, வண.ரவின் கல்தேரா அவர்கள் கல்விப்பீட தலைவராகவும் (இடது பக்கத்தில்) ரொஜர் ஸ்லெமர்மேன் அவர்கள் நிர்வாக உத்தியோகத்தராகவும் (வலது பக்கத்தில்) தமது 20 வருட சேவையினை பூர்த்தி செய்துள்ளனர்.

## பிரியாவிடையளித்தல்



### பெர்ணாட் கொஸ்தா

பெர்ணாட் கொஸ்தா அவர்கள் முதுகலைப்பட்ட கற்கைநெறியின் பாடத்திட்ட ஒருங்கிணைப்பாளராக 2021-ம் ஆண்டிலிருந்து பணியாற்றியுள்ளார். அவர் தனது சேவை காலத்தின்போது கல்விப்பீடத்திலும், சக உத்தியோகத்தர் மற்றும் மாணவர் மத்தியிலும் தமது அமைதியான ஞானத்திற்கூடாகவும் கனிவான வலிமைக்கூடாகவும் அழியாத அடையாளத்தை இட்டுச்சென்றிருக்கின்றார். தங்களுடைய வாழ்விலும் இறைபணியிலும் அவர் செலுத்திய செல்வாக்கை குறித்து அவரின் மாணாக்கர் மிக உயர்வாகப்பேசினர். தனது வகுப்பறைகளில் ஒரு ஆழமான வழிபாட்டு உணர்வை ஏற்படுத்துவது பெர்ணாட் அவர்களின் நீடித்த மரபுகளில் ஒன்றாகும். பிலிப்பைன்ஸ் நாட்டில் தலைமைத்துவத்திற்கான சர்வதேச பட்டதாரிகள் கல்லூரியில் (IGSL) சேவையாற்றி, பயின்றுவரும் பெர்ணாட் மற்றும் குடும்பத்தினருக்கும் தேவனுடைய ஆசீர்வாதத்தை வேண்டி நிற்கின்றோம்.

### ஜேசன் செல்வராஜா

ஜேசன் அவர்கள் கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக கொழும்பு இறையியல் கல்லூரியுடன் தொடர்புபட்டவராவார். கல்விப்பீடத்தின் அங்கத்தவராக இருந்ததோடு கொழும்பு இறையியல் கல்லூரியின் யாழ் கல்வி நிலையத்தின் முதலாவது ஒருங்கிணைப்பாளராக செயலாற்றியதற்கூடாக முதலாவது மாகாண கல்விக்கான கற்கைநெறியை ஆரம்பிப்பதில் முன்னோடியாக உதவியுள்ளார். வரவிருக்கும் நாட்களில் ஜேசன் அவர்கள் தொடர்ந்து பல்வேறு வழிகளில் திருச்சபையை சேவிக்கையில் அவரையும் அவருடைய குடும்பத்தையும் எமது ஜெபத்தில் தாங்கி நிற்கின்றோம்.





## கொழும்பு இறையியல் கல்லூரி தலைமையகம்

### விசுவாசம் மிக்க சேவையின் மைல் கற்களை அடையாளப்படுத்தல்

இவ்வருடம் வைகாசி மாதம் 31-ம் திகதியோடு கொழும்பு இறையியல் கல்லூரி தனது 30 வருட சேவையை பூர்த்தி செய்தது. 1994-ல் இலங்கை வேதாகமக்கல்லூரியின் ஒரேயொரு பிரிவாக தனது செயற்பாடுகளை ஆரம்பித்த கொழும்பு இறையியல் கல்லூரியானது 1997-ல் கொஹுவலையில் அமையப்பெற்ற தனது சொந்த வளாகத்திற்கு இடம்பெயர்ந்தது. அவ்வருடமே அதன் முதலாவது பட்டமளிப்பு இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது. கடந்த 30 ஆண்டுகளில் கொழும்பு இறையியல் கல்லூரி தலைமையகமானது பல முக்கியமான மைல் கற்களை கொண்டாடியுள்ளது. கொழும்பு இறையியல் கல்லூரி மீதான கடவுளின் தயவோடும், ஆசீர்வாதத்தோடும் இம்மைல் கற்களை கொண்டாடும் இத்தருணத்தில் இந்நினைவுப்பாதையில் எம்மோடு இணைந்து நடக்கும்படியாக உங்களையும் அழைக்கின்றோம்.


தலைமை கல்வி வளாகம் - 1997


முதலாவது பட்டமளிப்பு - 1997

## 30 வருட பயணத்தின் மைல் கற்கள்

## ஆசிய இறையியல் சங்கம் தனது அங்கீகாரத்தை புதுப்பிக்கின்றது



ஆசிய இறையியல் சங்கமானது (ATA) சமீபத்தில் கொழும்பு இறையியல் கல்லூரியின் கல்விப்பீட செயற்றிட்டங்களுக்கான தனது அங்கீகாரத்தை மேலும் 5 ஆண்டுகளுக்கு புதுப்பித்து வழங்கியுள்ளது. கலாநிதி.பெனட் லோரன்ஸ் (பிராந்திய செயலாளர், ஆசிய இறையியல் சங்கம் (ATA), வண. பிரவீன்குமார் இஸ்ரவேல் (தலைவர், சர்வதேச தலைமைத்துவ அபிவிருத்தி மேலாண்மை நிலையம், இந்தியா) மற்றும் கலாநிதி. ஹேர்மன் அன்ரைசன் (உப-அதிபர், இலங்கை வேதாகம கல்லூரி மற்றும் இறையியல் கல்லூரி, இலங்கை) என்போர் அடங்கிய (வலது பக்கம் காணலாம்.) ஆசிய இறையியல் சங்கத்தின் (ATA) அங்கீகாரம் அளிக்கும் குழுவை காணலாம்.




## கலாநிதி. மனோ இம்மானுவேல் அவர்கள் பங்கேற்ற 2024 ஆசிய சமாதான மாநாடு

பிலிப்பைன்ஸிலுள்ள மணிலாவில், 2024, தை மாதம் 23, 24-ம் திகதிகளில் இடம்பெற்ற ஆசிய சமாதான மாநாட்டில் ஒரு அமர்வினை, எமது கல்லூரியின் கல்வி முன்னேற்ற பகுதியின் தலைமையாளர் கலாநிதி. மனோ இம்மானுவேல் அவர்கள் தலைமை தாங்கி வழிநடத்தினார்.

## புதிய இடத்தில் வடகொழும்பு கல்வி நிலையத்தின் ஆரம்பம்

வடகொழும்பு கல்வி நிலையத்தின் கல்விச்சேவையானது புதிய இடத்தில் வைகாசி மாதம் 14-ம் திகதியன்று பிரதிஷ்டை பண்ணப்பட்டு நன்றி செலுத்தும் ஆராதனை நிகழ்வுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது. புதிய இடமானது கொழும்பு புறக்கோட்டை, டாம் வீதியில் அமைந்துள்ள மெதடிஸ்த சிட்டி மிஷன் கட்டிடத்தில் மேல் தளத்தில் அமைந்துள்ளது. இது கடந்த பன்னிரண்டு வருடங்களாக வடகொழும்பு மற்றும் ஹெந்தலை, வத்தளை பிரதேசங்களில் வசிக்கிற விசுவாசிகளுக்கு இறையியல் கல்வியை அளித்து வருகிற ஊழியத்தினை தொடர்வதற்கு வசதியாக, விசாலமான சிறந்த வசதிகளுடனான வகுப்பறைகள், நூலகத்தினை கொண்டதாக அமையப்பெற்றுள்ளது.







## கொழும்பு இறையியல் கல்லூரியிற்கு நன்கொடை அளிப்பதற்கு:

**1 வங்கி பரிமாற்றம் மற்றும் வெளிநாட்டு பணபரிமாற்றம் (அமெரிக்க டொலர் மற்றும் கனேடிய டொலர்)**

மேலதிக தகவல்களுக்கு எம்மை தொடர்பு கொள்ளுங்கள்

**2 கடனட்டை மூலமாக**

**கொழும்பு இறையியல் கல்லூரியின் இணையத்தளத்தில் கட்டணம் செலுத்தும் வலைவாசல் மூலமாக பணத்தினை பரிமாற்றம் செய்யலாம்**

www.cts.lk என்ற எமது இணையத்தளத்திற்கு செல்லுங்கள்
|
முகப்பு பக்கத்தில் மேல் வலதுபுறத்தில் உள்ள கொழும்பு இறையியல் கல்லூரியிற்கு நன்கொடை அளிப்பதற்கு என்ற (Give to CTS) பொத்தானை அழுத்துங்கள்
|
உங்கள் நன்கொடையை செலுத்துங்கள்

**3 காசோலைகள்**

கொழும்பு இறையியல் கல்லூரி என **பெயரிட்டு** (கணக்கிற்கு செலுத்தவும் என குறுக்கு கோடிட்டு), அதிபர், கொழும்பு இறையியல் கல்லூரி, 189, துட்டுகெமுனு வீதி, கொஹுவலை, இலங்கை என்ற முகவரிக்கு **அனுப்பி வைக்கவும்**.

**4 நேரடி பணக்கொடுப்பனவுகள்**

நேரடியாக கொஹுவலையிலுள்ள எமது கொழும்பு இறையியல் கல்லூரியின் தலைமை காரியாலயத்திற்கு வருகை தரவும்.

**மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்: வள மேம்பாட்டு முகாமையாளர், ரொஷல் ஹேக்கல்-ரணசிங்க**
+94 77 350 2930 | ROCHELLE@CTS.LK

WWW.CTS.LK | +94 11 2890809